# அமைச்சர் மா. சுப்பிரமணியன் அறிவிப்புகள்...

7ஆம் பக்கத் தொடர்ச்சி

**53.** விபத்து மற்றும் அவசரகால சிகிச்சைகளை மேற்கொள்ளும் வகையில், நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சிஆர்ம் கருவி ரூபாய் 30.00 இலட்சம் மதிப்பீட்டிலும், சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சிஆர்ம் மற்றும் ஆர்த்ரோஸ்கோப் கருவி ரூபாய் 1.00 கோடி மதிப்பீட்டிலும், வாணியம்பாடி, மேலூர், குன்னூர் மற்றும் அரூர் ஆகிய 4 அரசு மருத்துவமனைகளுக்கு சிஆர்ம் கருவி ரூபாய் 1.40 கோடி மதிப்பீட்டிலும் வழங்கப்படும்.

**54.** தமிழ்நாடு விபத்து மற்றும் அவசரகால சிகிச்சை மையங்களை மேம்படுத்தும் வகையில் eFast இயந்திரம், கிரஷ் கார்ட் மற்றும் அவசரகால அறுவை சிகிச்சைகள் மேற்கொள்வதற்கு தேவையான உயிர்காக்கும் உயர்ரக மருத்துவ உபகரணங்கள் ரூபாய் 3.75 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**55.** சென்னை - கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் தீக்காய சிகிச்சைக்கான ஒப்புயர்வு மையத்தை வலுப்படுத்த அறுவை சிகிச்சைக்கான கருவிகள், இயன்முறை மருத்துவக் கருவிகள், நுண் அறுவை சிகிச்சைக்கான கருவிகள் உட்பட உயர்ரக மருத்துவ உபகரணங்கள் ரூபாய் 2.20 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**56.** தேசிய நலவாழ்வு குழும நிதியுதவியுடன் அரசு மருத்துவமனைகளில் தேவையின் அடிப்படையில் சிறுநீரக செயலிழப்பு சிகிச்சைக்காக 50 இரத்த சுத்திகரிப்பு (Dialysis) கருவிகள் ரூபாய் 4.00 கோடி நிறுவப்படும்.

மேலும், தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்டத்தின்கீழ், 2 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் 3 அரசு மருத்துவமனைகளுக்கு ரூபாய் 94.00 இலட்சம் மதிப்பீட்டில் இரத்த சுத்திகரிப்பு (Dialysis) கருவிகள் நிறுவப்படும்.

## புதுப்பொலிவுடன் அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை!

**57.** அவசரகால மகப்பேறு சிகிச்சை சேவைகளை மேம்படுத்திட கோபிசெட்டிபாளையம், ஸ்ரீவில்லி புத்தூர் மற்றும் ஆரணி அரசு மருத்துவமனைகளுக்கு உபகரணங்களும், அதிக பிரசவங்கள் நடைபெறும் 43 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு CTG, மல்டிபாரா மானிட்டர் மற்றும் இதர கருவிகள் ரூபாய் 3.39 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**58.** பாதுகாப்பான மகப்பேற்றினை உறுதிப்படுத்தும் வகையில் தேவைப்படும் Rh நெகட்டிவ் இரத்தப் பிரிவு கொண்ட கர்ப்பிணி பெண்களுக்கு ஆன்டிடி குளோபுலின் (AntiD Globulin) வழங்கப்படும்.

மேலும், இரத்தசோகை உள்ள கர்ப்பிணித் தாய்மார்களின் ஹீமோகுளோபின் அளவை சரிசெய்வதற்கு முன்னோடித் திட்டமாக திண்டுக்கல், தஞ்சாவூர், திருப்பூர் மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஃபெரிக் கார்பாக்சி மால்டோஸ் மருந்தூசி (Inj. Ferric Carboxy Maltose) வழங்கப்படும்.

**59.** பாதுகாப்பான மகப்பேறு மற்றும் சுகப் பிரசவங்களை ஊக்குவிக்கும் வகையில் மகப்பேறு செவிலியர் வழிநடத்தும் பராமரிப்பு மற்றும் பயிற்சி பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. இப்பிரிவிலுள்ள பயிற்சி பெற்ற செவிலியர்கள் மூலமாக தமிழ்நாட்டில் இதர அரசு மருத்துவமனைகளிலுள்ள செவிலியர்களுக்கு, விரிவான மகப்பேறு பராமரிப்பு குறித்த பயிற்சியும் (Nurse Practicener in Midwifery Training), இந்திய மருத்துவமுறையுடன் ஒருங்கிணைந்து ரூபாய் 1.74 கோடி மதிப்பீட்டில் பாதுகாப்பான மற்றும் சுகப்பிரசவம் குறித்த பயிற்சியும் அளிக்கப்படும்.

**60.** கர்ப்பகால சிக்கல்கள் உள்ள அனைத்து தாய்மார்களையும் (High Risk Mothers), 104 / 102 அவசரகால தொலைபேசி மூலம் கண்காணித்து மருத்துவ ரீதியாக உரிய அறிவுரைகள் வழங்கப்படும். இதற்காக ரூபாய் 25.00 இலட்சம் ஒதுக்கப்படும்.

**61.** பச்சிளங்குழந்தைகளின் இறப்பு விகிதத்தை குறைக்க அதிகமாக பிரசவம் நடைபெறும் 471 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பச்சிளங்குழந்தை பராமரிப்பு சேவையை வலுப்படுத்த தேவையான மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படும். மேலும் திருப்பத்தூர் மாவட்டத்தில் வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் உள்ள பச்சிளங்குழந்தைகள் நிலைப்படுத்துதல் பிரிவானது சிறப்பு பச்சிளங்குழந்தைகள் பராமரிப்பு பிரிவாக தரம் உயர்த்தப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் திருவொற்றியூர், மாதவரம், வளசரவாக்கம், அம்பத்தூர், ஆலந்தூர் மற்றும் புளியந்தோப்பு ஆகிய 6 இடங்களில் உள்ள பச்சிளங்குழந்தைகள் நிலைப்படுத்துதல் பிரிவுகள் புதுப்பித்து தரம் உயர்த்தப்படும். இதற்கான மொத்த மதிப்பீடு ரூபாய் 4.01 கோடி ஆகும்.

**62.** நவீன எக்ஸ்ரே, படம் காப்பக தகவல் தொடர்பு அமைப்பு (PACS) மற்றும் உயர்தர டாப்ளர் கருவிகள் உள்ளிட்ட நவீன உபகரணங்கள் எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனைக்கு ரூபாய் 2.25 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**63.** பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு இயக்ககம் மூலம், ஆரம்பகால குழந்தை வளர்ச்சி மீது கவனம் செலுத்த பெற்றோர்களுக்கான செயலி உருவாக்கப்பட்டு, குழந்தை பிறந்தது முதல் 1000 நாட்கள் வரை தொடர்ந்து கண்காணிக்கும் திட்டம், கூடுதலாக 30 வட்டாரங்களில் விரிவாக்கம் செய்யப்படும். இது பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு உறுதுணையாக இருக்கும்.

**64.** தேசிய சிறார் நலத் திட்டத்தின் (RBSK) கீழ் சென்னை, செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களிலுள்ள பள்ளிக் குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினரை பரிசோதிப்பதற்காக, முதற்கட்ட பரிசோதனைக்கு தேவையான கருவி தொகுப்புகள், பிற உபகரணங்கள் மற்றும் மருந்துகளுடன் நடமாடும் மருத்துவக் குழுக்கள் ரூபாய் 22.00 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதலாக ஏற்படுத்தப்படும்.

**65.** மாவட்ட தொடக்கநிலை இடையீட்டு மைய (DEIC) வளாகத்தில் வளரிளம் பருவத்தினருக்கான ஆலோசனை மற்றும் சிகிச்சைப் பிரிவு (Teen Clinic) அமைக்கப்படும். இப்பிரிவில் இளம் வயது திருமணங்களை குறைத்தல், வளரிளம் பருவ கர்ப்பத்தை தவிர்த்தல், இனப்பெருக்க மற்றும் பாலின நலனை மேம்படுத்துதல், ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறையை மாற்றுதல், மன நலம் காத்தல், ஊட்டச்சத்துள்ள ஆரோக்கியமான உணவு பழக்கத்தினை கடைப்பிடித்தல் போன்றவை குறித்த ஆலோசனை வழங்கப்படும். மேலும், போதைப் பொருட்கள் பயன்படுத்துவதை தவிர்த்தல் மற்றும் அதிலிருந்து மீளுதல் போன்ற சேவைகள் வழங்கப்படுவதோடு, வளரிளம் பருவத்தினரின் ஆரோக்கியத்தை மேம்படுத்திடும் வகையில் சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறையுடன் ஒருங்கிணைந்த செயல்திட்டம் வரையறுக்கப்படும்.

**66.** மனநலம் பாதிக்கப்பட்ட வீடற்ற நபர்களின் சமூக சூழல் மற்றும் பல்வேறு பாதிப்புகளுக்குள்ளாகும் பாதுகாப்பற்ற நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டு அவர்களது நலனை மேம்படுத்தும் வகையில் மாநில கொள்கை வெளியிடப்படும்.

**67.** தமிழ்நாட்டில் மனநலம் பாதிக்கப்பட்ட வீடற்ற நபர்களுக்கான அவசர சிகிச்சை மற்றும் மீட்பு மையங்கள் [Emergency Care and Recovery Centres] தற்போது 16 இடங்களில் இயங்கி வருகின்றன. இந்த சேவைகளை மேலும் விரிவுபடுத்தும் வகையில், மாவட்டத்திற்கு ஒன்று அல்லது இரண்டு புதிய அவசர சிகிச்சை மற்றும் மீட்பு மையங்கள் ரூபாய் 66.00 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

**68.** தென்காசி, மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூரில் உள்ள மாவட்ட தொடக்கநிலை இடையீட்டு மையங்களில் [District Early Intervention Centres], மதியிறுக்கம் எனப்படும் ஆட்டிசம் குறைபாடு நோய்களை [Autism Spectrum Disorders] ஆரம்ப நிலையில் கண்டறியும் வகையில் நிலைகொள்ளா கவனச் சிதைவுக்கான [Attention Deficit Hyperactivity Disorder ADHD] சிகிச்சை மையங்கள் நிறுவப்படும். மேலும், முறையாக கட்டமைக்கப்பட்ட பல்லடுக்கு தொடர் பயிற்சிகள் மூலம் ஆட்டிசம் குறைபாடு நோய்களை ஆரம்ப நிலையில் கண்டறியும் வகையில் அரசு மருத்துவர்கள் மற்றும் பிற மருத்துவ பணியாளர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படும்.

**69.** 36 அரசு மற்றும் 34 சுயநிதி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் பயிலும் 11,275 மாணவர்கள் மூலம் கிராமங்களில் வசிக்கும் ஒரு இலட்சம் குடும்பங்களை தத்தெடுத்து அவர்களின் உடல் நலம், சமூக நலம் மற்றும் சுற்றுச்சூழல் ஆரோக்கியம் கண்காணிக்கப்பட்டு, அதை பராமரிக்க தேவையான உதவிகள் "குடும்ப தத்தெடுப்பு மற்றும் சமூக வழிகாட்டுதல்" திட்டத்தின்கீழ் ரூபாய் 70.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**70.** ஒருங்கிணைந்த கண் சிகிச்சை மருத்துவ சேவைகளை மயிலாடுதுறை மற்றும் தருமபுரி மாவட்டங்களில் உள்ள மக்களுக்கு நேரடியாக வழங்குவதற்கு நடமாடும் கண் மருத்துவப் பிரிவு ரூபாய் 60.00 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

**71.** சென்னை அரசு ஆர்.எஸ்.ஆர்.எம் மருத்துவமனையில் செயல்பட்டு வரும் இரத்த நிலையத்திற்கு, இரத்தப் பிரிப்பு அலகு மற்றும் அபெரிசிஸ் (Apheresis) சேவைகளுக்கான நவீன உபகரணங்கள் ரூபாய் 3.07 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**72.** 11 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில் இரத்த சேமிப்பு அலகினை நிறுவிட தேவைப்படும் நவீன உபகரணங்கள் ரூபாய் 1.10 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**73.** அதீத இரைச்சலினால் ஏற்படும் செவித்திறன் பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கு உரிய பரிசோதனை மற்றும் சிகிச்சை வழங்க அரசு மருத்துவமனைகளுக்கு ரூபாய் 33.00 இலட்சம் மதிப்பீட்டில் உபகரணங்கள் வழங்கப்படும்.

மேலும், உலகத்தர நிலைகளின் அடிப்படையில் பாதுகாப்பான / வரையறுக்கப்பட்ட ஒலி அளவீடுகளை மையப்படுத்திய கொள்கை வரைவினை உருவாக்கி இரைச்சலினால் ஏற்படும் செவித்திறன் இழப்பு குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**74.** பல் மருத்துவ சிறப்பு சேவைகளான வேர் சிகிச்சை, சீரமைப்பு சிகிச்சை, செயற்கை பற்கள் அமைத்தல் மற்றும் சிறிய அளவிலான பல் அறுவை சிகிச்சைகள் மக்களுக்கு எளிதில் கிடைப்பதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 25 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில் "பல் சிறப்பு பரிந்துரைப்பு மையங்கள்" ரூபாய் 5.32 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**75.** சென்னை மற்றும் கடலூர் அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு அதிநவீன மருத்துவ உபகரணங்கள் ரூபாய் 7.21 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும். மேலும், 60 அரசு மருத்துவமனைகளில் செயல்படும் பல் மருத்துவப் பிரிவிற்கு நவீன பல் எக்ஸ்ரே உட்பட உயர்தர பல் மருத்துவ உபகரணங்கள் ரூபாய் 4.20 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**76.** 100 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு இதயம் காப்போம் திட்டத்தின்கீழ் இ.சி.ஜி. உபகரணங்களும், 80 வட்ட மருத்துவமனைகளுக்கு இருதய சிகிச்சை மேம்பாட்டிற்கான உபகரணங்களான டீஃபிப்ரிலேட்டர், மல்ட்டி பாராமானிட்டர், தீவிர சிகிச்சைப் பிரிவு படுக்கைகள் மற்றும் அவசர நிலை உயிர் மீட்பு உபகரணங்கள் ரூபாய் 1.94 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**77.** கிருஷ்ணகிரி, தருமபுரி, நாமக்கல் மற்றும் தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மூன்றாம் பாலினத்தவர் களுக்கான பன்னோக்கு மருத்துவ மையம் ரூபாய் 60.00 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**78.** பழங்குடியின கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தலசீமியா மற்றும் மரபணு சம்பந்தமான நோய்களை கண்டறியும் சிறப்பு பரிசோதனைகள் (Amnio centesis) கோயம்புத்தூர், சேலம், வேலூர், திருச்சிராப்பள்ளி, தருமபுரி மற்றும் மதுரையில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மேற்கொள்ளப்படும்.

## தாய் - சேய் நல சேவைகளுக்கான தரமிகு புதிய கட்டடங்கள்

**79.** மக்களைத் தேடி ஆய்வக சேவைத் திட்டத்தின்கீழ், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் அடிப்படை ஆய்வக பரிசோதனைகள் செய்வதற்கான ஆய்வக வேதிப்பொருட்கள் மற்றும் நுகர்பொருட்களை வழங்கவும், ஆய்வக மாதிரிகள் கீழ்நிலை ஆய்வகங்களில் இருந்து உயர்நிலை ஆய்வகங்களுக்கு பரிசோதனைக்கு கொண்டு செல்லப்படுவதற்கும் ரூபாய் 216.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

**80.** மக்களைத் தேடி ஆய்வக சேவைத் திட்டத்தின்கீழ், இரண்டாம் நிலை அரசு மருத்துவமனைகளை வலுப்படுத்தும் வகையில் SemiAuto Analyzer, Cell Counter போன்ற ஆய்வக உபகரணங்கள் ரூபாய் 12.00 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**81.** அனைத்து அரசு மருத்துவ மையங்களில் தகவல் மேலாண்மை மற்றும் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினை வலுப்படுத்த கணினிகள், அச்சுப்பொறி மற்றும் ஸ்கேனர் உள்ளடக்கிய பல்வேறு உபகரணங்கள் ரூபாய் 40.00 கோடி மதிப்பீட்டில், தேசிய நலவாழ்வு குழும நிதியுதவியின்கீழ் வழங்கப்படும்.

**82.** மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககத்தின்கீழ் "மாநில மருத்துவக் கல்வி கற்றல் மேலாண்மை அமைப்பு" நிறுவப்படும். இவ்வமைப்பு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் சுயவிவரங்கள், கற்பித்தல், கற்றல் செயல்முறைகள் மற்றும் கற்றல் விளைவுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய நவீன தரவு மேலாண்மை அடிப்படையிலான அமைப்பாகும்.

இக்கற்றல் மேலாண்மை அமைப்பானது, தற்போதுள்ள மருத்துவக் கல்லூரி இணையதளங்களுடன் தடையின்றி இணைக்கும் ஒருங்கிணைந்த கண்காணிப்பு பலகையை (Dash Board) கொண்டிருக்கும். ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் சுயவிவரங்கள், கருத்து சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வு, கற்பிக்கும் வழிமுறைகள், கற்பித்தலுக்கான இணைய வழி ஆதார இணைப்புகள், படிவங்கள் மற்றும் பதிவிறக்கங்கள் ஆகிய வசதிகளைக் கொண்ட இவ்வமைப்பானது ரூபாய் 80.00 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

**83.** தமிழ்நாடு தேசிய நலவாழ்வு குழுமத்தின்கீழ், தகவல் தொழில் நுட்பத்தை மேம்படுத்தவும், மருத்துவமனை தகவல் மேலாண்மை திட்டம் 3.0ஐ செயல்படுத்தவும், அனைத்து அரசு மருத்துவமனைகளுக்கும் LAN மற்றும் இணைய இணைப்பின் மேலாண்மைக்காகவும், அனைத்து இணைய முகப்பை ஒருங்கிணைக்கவும், தரவு மேலாண்மை மற்றும் தரவுப் பாதுகாப்பினை உறுதி செய்யவும், "தகவல் தொழில்நுட்ப திட்ட மேலாண்மைப் பிரிவு" ஏற்படுத்தப்படும்.

**84.** ரூபாய் 22.00 இலட்சம் மதிப்பீட்டில், மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு மருத்துவ மையங்களும் தேசிய தர நிர்ணய (National Quality Assurance Standards NQAS) அடிப்படையில் பிரத்யேக இணைய முகப்பின் (Web Portal) வாயிலாக தர மதிப்பீடு செய்து தொடர்ந்து கண்காணிக்கப்படும்.

**85.** தமிழ்நாட்டின் வடக்கு, மேற்கு, மத்திய மற்றும் தெற்கு ஆகிய நான்கு மண்டலங்களில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மதிப்பீடு செய்யப்பட்டு "நோயாளிகளின் பாதுகாப்பிற்கான சிறந்த மருத்துவமனை விருது" (Patient Safety Award), ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படும்.

**86.** தமிழ்நாட்டில் மருத்துவ ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளை மேம்படுத்துவதற்காக மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககத்தின் கீழ் கலைஞர் நூற்றாண்டு ஒருங்கிணைந்த ஆராய்ச்சி அறக்கட்டளை ரூபாய் 10.00 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும். இந்த அறக்கட்டளை மருத்துவப் பட்டபடிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு மாணவர்கள் மற்றும் மருத்துவ ஆசிரியர்களுக்கிடையே மருத்துவ ஆராய்ச்சி நடவடிக்கைகளை ஊக்குவிக்கவும், 200 மருத்துவ அறிவியல் சார்ந்த ஆராய்ச்சி திட்டங்களுக்கு நிதி மற்றும் மானியங்களை வழங்கி, மனித நோய்களுக்கான காரணம் மற்றும் சிகிச்சை பற்றிய ஆராய்ச்சியில் தமிழ்நாடு சிறந்து விளங்கவும் வழிவகை செய்யும்.

**87.** தருமபுரி மாவட்டம் - மாரண்டஹள்ளி மற்றும் தேனி மாவட்டம் - வீரபாண்டியில் உள்ள சுகாதார செவிலியருக்கான பயிற்சிப் பள்ளிக்கு கூடுதல் விடுதிக் கட்டடங்கள் மற்றும் 12 தாய் சேய் நலப் பயிற்சி ஆய்வகங்களுக்கு தேவையான உபகரணங்கள் ரூபாய் 7.52 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**88.** செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில், ஒருங்கிணைந்த சுகாதார பராமரிப்பு நிபுணத்துவப் பயிற்சி மையங்கள் (Integrated Health Care Professional Training Centre) ஏற்படுத்தி, சுகாதாரப் பணியாளர்களுக்கு நிர்வாக திறனை மேம்படுத்துதல், மருத்துவ தகவல் தொடர்பு திறன் மற்றும் மென் திறன் ஆகிய பயிற்சிகள் வழங்கப்படும்.

**89.** அரசு மருத்துவக் கல்லூரிகளில் மருத்துவம் சார்ந்த பட்டப் படிப்பு பயின்று வரும் மற்றும் தேர்ச்சி பெற்ற மாணவ - மாணவியர்களுக்கான, திறன் மேம்பாடு மற்றும் வேலை வாய்ப்பு முகாம்கள் ஆண்டுதோறும் நடத்தப்படும்.

**90.** அரசு மருத்துவமனைகளுக்கு சமூக பொறுப்பு நிதி பெறுநிறுவனங்களின் பங்களிப்பு (Corporate Social Responsibility), நன்கொடைகள் மற்றும் வளங்களை ஒருங்கிணைத்து நிர்வகிக்க தனிப் பிரிவு ஒன்று தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்டத்தின்கீழ் அமைக்கப்படும்.

**91.** மிக அதிக உடல் எடையுடன் உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு, குடலிறக்கம், கல்லீரல் செயலிழப்பு, இதய நோய் போன்ற பல்வேறு பாதிப்புகள் உள்ளோருக்கான உயிர் காக்கும் எடைக்குறைப்பு அறுவைச் சிகிச்சை சென்னை கடான்லி, கோயம்புத்தூர் மற்றும் மதுரை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் வழங்கப்படும்.

**92.** தேசிய ஆயுஷ் குழுமத்தின் கீழ், தமிழ்நாட்டில் 300 இந்திய மருத்துவமுறை மருத்துவ பிரிவுகள், ஆயுஷ் நலவாழ்வு மையங்களாக தரம் உயர்த்தப்படும். இம்மையங்களுக்கு பகுதி நேர யோகா பயிற்றுனர்களுக்கான ஊக்கத்தொகை, அறைகலன்கள் மற்றும் இதர உபகரணங்கள் வழங்க ரூபாய் 36.06 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**93.** சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் உள்நோயாளிகளின் பயன்பாட்டிற்காக ஒருங்கிணைந்த 50 படுக்கைகள் கொண்ட கட்டடம் ரூபாய் 5.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**94.** கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் அரசு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நோயாளிகளின் நலனுக்காக கூடுதல் கட்டடம் மற்றும் தேவையான அதிநவீன உபகரணங்கள் ரூபாய் 3.50 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**95.** தேசிய ஆயுஷ் குழுமத்தின் கீழ் தமிழ்நாட்டிலுள்ள சிவகங்கை, தஞ்சாவூர், கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் ஆயுஷ் பிரிவினை வலுப்படுத்தும் விதமாக கட்டடங்களும் அறைகலன்களும் தேவையான நவீன மருத்துவ உபகரணங்களும் வழங்க ரூபாய் 2.50 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**96.** மாநில மருந்துகள் பகுப்பாய்வு ஆய்வகத்தின் தரத்தை உயர்த்தி National Accreditation Board for Testing and Calibration Laboratories (NABL) சான்றிதழ் பெறுவதற்காக உட்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டை வலுப்படுத்தி, சந்தையிலுள்ள மருந்து மாதிரிகளை சரியான நேரத்தில் சோதனை செய்து, மருந்து பகுப்பாய்வு அறிக்கைகள் தாமதமின்றி வழங்கவும் தரமற்ற, புழக்கத்திலிருந்து போலி மருந்துகளை நீக்குவதற்கும் ரூபாய் 2.32 கோடி மதிப்பீட்டில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**97.** திருநெல்வேலி - பாளையங்கோட்டையில் அமைந்துள்ள அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இயங்கி வரும் சித்த மருந்துகள் உற்பத்தி செய்யும் நிலையத்திற்குத் தேவையான நவீன மருத்துவ உபகரணங்கள் ரூபாய் 60.00 இலட்சம், கூடுதல் கட்டடம் மற்றும் புதுப்பித்தலுக்காக ரூபாய் 1.00 கோடி வழங்கப்படும்.

**98.** இன்றைய நவீன கால கட்டத்தில் முறையற்ற உணவு முறை, உடல் உழைப்பின்மை மற்றும் மனம் சார்ந்த காரணங்களினால் மக்களின் வாழ்க்கை முறையில் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவாக உடல் பருமன், உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு, முதுகு வலி, மூட்டு வலி மற்றும் மன அழுத்தம் போன்ற நோய்களை குணப்படுத்துவதற்காக இந்திய மருத்துவமுறையில் சிறப்பான சிகிச்சை வழங்க செங்கல்பட்டில் உள்ள சர்வதேச யோகா மற்றும் இயற்கை மருத்துவ அறிவியல் கழக நிறுவனத்தில் ரூபாய் 1.25 கோடி மதிப்பீட்டில் கட்டணப் பிரிவுகள் தொடங்கப்படும்.

மேலும் சென்னை அரும்பாக்கத்தில் உள்ள அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகத்தில் உள்ள டாம்ப்கால் கட்டடத்தில் ரெஜுவன் தெரபி வசதியுடன் கூடிய கட்டணப் பிரிவுகள் ரூபாய் 10.00 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

**99.** சித்தா, ஆயுர்வேதம், யோகா இயற்கை மருத்துவம், யுனானி மற்றும் ஓமியோபதி துறைகளில் பயிலும் 25 மாணவ மாணவியர்களுக்கு ஆராய்ச்சி மேற்கொள்வதற்காக ரூபாய் 6.25 இலட்சம் நிதி வழங்கி ஊக்குவிக்கப்படும்.

**100.** புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு இந்திய மருத்துவமுறை மற்றும் அலோபதி மருத்துவமுறையுடன் ஒருங்கிணைந்த சிகிச்சை அணுகுமுறையினை வழங்குவதற்கு காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனையில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும்.

**101.** இந்திய மருத்துவமுறை மருந்துகளின் அப்ளைடு மெக்கானிக்ஸ் மற்றும் பயோ மெடிக்கல் பொறியியல் துறையின் மூலம் புதிய தொழில்நுட்ப உத்திகளை பயன்படுத்தி சிகிச்சை மேற்கொள்ள சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்ப கழகத்துடன் (IIT Madras)) புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும்.

**102.** இந்திய மருத்துவமுறையில் வழங்கப்படும் உயர்தர மருந்துகளின் தரத்தை அறியவும், ஆயுர்வேத அறிவியல் ஆராய்ச்சிக்கான மத்திய குழுவுடன் (Central Council for Research in Ayurvedic Sciences - CCRAS) இணைந்து ஆராய்ச்சி மேற்கொள்ளவும், தொடர் கல்வி பயிற்சி பட்டறை மூலம் தேசிய தரச்சான்று பெற்ற ஆய்விதழில் ஆராய்ச்சி கட்டுரைகளை வெளியிடவும், ஆராய்ச்சி மாணவர்கள் மற்றும் அறிவியல் அறிஞர்களின் கருத்துகளை பரிமாறிக் கொள்ளவும் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும்.

**103.** இந்திய மருத்துவமுறை மருத்துவம் உலகளவில் அங்கீகாரம் பெறுவதற்கும், புதிய மருந்து மூலக்கூறுகளை வெளி கொண்டுவருவதற்கும், ஆராய்ச்சி மேற்கொள்ளவும், இந்திய மருத்துவத்தின் நோய் கணிப்பை ஆதாரப்பூர்வமாக அறிய புதிய உபகரணங்களை உருவாக்கவும், அறிவியல் அறிஞர்களின் கருத்துக்களை பரிமாறிக் கொள்ளவும், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையரகம் அண்ணா பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும்.

**104.** சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை, பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் டாம்ப்கால் நிறுவனத்தின்கீழ் இயங்கும் சித்த மருந்துகளை உற்பத்தி செய்யும் இடங்களை மேம்படுத்தவும், இம்மருந்துகளின் மூலப்பொருள்கள் அடங்கிய கிடங்குகளின் பராமரிப்பு முறை, மருந்து சேமிப்பு அறை, இயந்திரங்கள் அறை, மருந்து உற்பத்தி செய்யும் பகுதி ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்களுக்கான செயல்பாட்டு வழிமுறைகள் அடங்கிய கையேடு (SOP) வரையறுக்கப்பட்டு வெளியிடப்படும்.

**105.** இந்திய மருத்துவமுறை மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருத்துவக் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பயிற்றுவிக்கும் திறனை அதிகரிக்கவும், இத்துறை சார்ந்த ஆராய்ச்சிப் பழப்புகளை ஊக்குவிப்பதற்கும் சிறப்பு பயிற்சிகள் வழங்கப்படும்.

**106.** பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு உணவின் நன்மைகள், சரிவிகித உணவு முறை, தவிர்க்க வேண்டிய உணவு வகைகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். இதில் ஆசிரியர் கையேடுகள், உணவு தூதர் குழு, வகுப்பறை கற்பித்தல் என பல்வேறு செயல்பாடுகள் மூலம் மாணவர்கள் ஆரோக்கியமான வாழ்வுக்குத் தேவையான சரியான உணவை தேர்வு செய்யும் திறனை பெறுவார்கள்.

**107.** அரசு மருத்துவமனைகளில் உள்ள உள்நோயாளிகளுக்கு இந்திய மருத்துவ முறையின்படி பாரம்பரிய சிறப்பு உணவு வழங்கப்படும். இந்த முயற்சி, பாரம்பரிய மருத்துவமுறைகளையும் நவீன மருத்துவத்தையும் இணைப்பதோடு, நோயாளிகள் விரைவாக குணமடைவதற்கும், அவர்களது நலவாழ்வினை மேம்படுத்துவதற்கும் வழிவகை செய்யும்.

**108.** சேலம், தஞ்சாவூர் மற்றும் பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் உள்ள உணவுப் பகுப்பாய்வு மையங்களுக்கு பூச்சிக் கொல்லி மற்றும் நுண்ணுயிர்க் கொல்லி சோதனை செய்யும் அதிநவீன உபகரணங்கள் ரூபாய் 24.00 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும். இதன் மூலம் உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டம் 2006ன் படி பழங்கள், காய்கறிகள், மசாலாப் பொருட்கள், தானியங்கள் மற்றும் இயற்கை உணவு வகைகளில் உள்ள பூச்சிக்கொல்லிகள் மற்றும் நுண்ணுயிரிகளின் அளவை பரிசோதிக்க உதவும்.

**109.** அரசு மருத்துவமனைகளை நாடி வரும் பொதுமக்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் மற்றும் உயர்சிறப்பு சிகிச்சை முறைகள் அதிக எண்ணிக்கையில் மேற்கொள்ளப்படுகின்ற காரணத்தினால் அரசு மருத்துவமனைகளின் நிதித் தேவை அதிகரித்து வருகிறது. எனவே, மருத்துவமனைகளுக்கு கூடுதல் நிதியை உறுதி செய்யும் விதமாக, மருத்துவமனை கட்டமைப்பினை வலுப்படுத்தி அதன் மேம்பாட்டிற்கு உதவிடும் வகையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட தொகுப்பு நிதி ஒதுக்கீட்டு விகிதம் மறுசீராய்வு செய்யப்படும்.

**110.** வருங்கால சந்ததியினரின் நலனை கருத்தில் கொண்டு, போதைப் பொருட்கள், மது மற்றும் புகையிலை உட்கொள்வதால் ஏற்படும் தீமைகள் குறித்து, பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு பள்ளிக் கல்வித் துறை, உயர் கல்வித் துறை மற்றும் காவல்துறையுடன் இணைந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் 110 அறிவிப்புகளை அறிவித்தார்.